<u>**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**</u>

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 949/2019 |
| நாள் | 12.11.2025 |
| வா.சா.1 | முருகேசன் |
| வயது | 54 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு பைனான்ஸ் தொழிலாகும். விவசாயமும் செய்து வருகிறேன். நான் எனது வழக்குரையில் பைனான்ஸ் தொழிலும், விவசாயமும் செய்து வருகிறேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விவசாயம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன். நான் பாரி என்ற பெயரில் பைனான்ஸ் தொழிலை கடந்த 25 ஆண்டுகளாக செய்து வருகிறேன். மேற்படி பாரி பைனான்ஸ் நிறுவனம் ஒரு கூட்டுபங்குதாரர் பைனான்ஸ் நிறுவனமாகும். வா.சா.2 எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். அவர் என்னுடைய நண்பராவார். நான் விவசாயம் செய்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிட்டா ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் சிட்டா ஆவணம் எதையும் என் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், இவவழக்கிற்காக தாக்கல் செய்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தவில்லை.

**(கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.